03.09.2025

O.S.No. 246/2022

PW1– ராஜகுத்தாலிங்கம் – த/பெ. கந்தசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.09.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் காவல்துறையில் சிறப்பு உதவிஆய்வாளராக இருந்து தற்போது பணி விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது காலிஇடத்திற்குரிய சுற்றுச்சுவருக்கு அடுத்த தென்பக்கம் 1 ½ அடி இருப்பதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுற்றுச்சுவர் என்பது உரிமையாளரின் உரிமையை குறிக்கும் என்றால் சரியல்ல. எனது சுற்றுச்சுவருக்கு தென்பக்கமாக உள்ள இடத்தை வெள்ளையடிப்பதற்காக விட்டுள்ளேன். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள சொத்தின் புல எண்.528/1 என்றால் சரிதான். புல எண்.528/1ல் சுமாராக 15 செண்ட் இருக்கும். புல எண்.528/1 என்பது பல உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது எனது உடன்பிறந்த சகோதரியின் மனைவியின் பெயரில் என்றால் சரிதான். புல எண்.528/1 அனைத்து உட்பிரிவு இருந்தால் மட்டுமே தபசில் சொத்தை சரியாக அடையாளம் காணமுடியும் என்றால் சரிதான். ஆணையர் புல எண்.528/1 மட்டும் அளக்க கோரி நான் தாக்கல் செய்த மனுவில் ஆணையர் உட்பிரிவையும் சேர்த்து அளந்திருப்பது தவறு என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கைக்கு நான் எந்த ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அதற்கு ஆட்சேபனை

தெரிவித்தார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் ஆட்சேபனை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆணையர் அறிக்கை தவறுதலாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

3. பிரதிவாதி தபசிலில் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, கடைகட்டியிருக்கிறார். மேற்படி புல எண்ணின் உட்பிரிவு குறிப்பிடப்படாததால் அதுசம்பந்தமாக வினா எழுப்பப்படும்போதுதான் வாதிக்கு ஒரு வாய்ப்பளித்து குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு போதிய வாய்ப்பு அளித்தும் உட்பிரிவு விவரங்களை குறிப்பிடப்படவில்லை என்றால் தாவா சொத்து அளவீடு செய்யப்பட்டதால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை.

4. நான் விளம்புகை மற்றும் சுவாதீன ஒப்படைப்பு வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது மகனின் சொத்தை சேர்த்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் வாதியாகிய நானும், 2ம் வாதியாகிய எனதுமகனும் தனித்தனியாக பரிகாரம் கேட்டுள்ளோம். தனித்தனியாக பிரித்து பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். வழக்கில் 4,5 தபசில் சொத்துக்களில் பரிகாரம் கோரியுள்ளதாக கண்டுள்ளது என்றால் நான் 1,3ம் தபசில் சொத்துக்களுக்கு மட்டுமே கோரியுள்ளேன். 4,5 தபசிலுக்கு குறிப்பிட்டு புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனவே 4,5 தபசில் சொத்தை பொறுத்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

5. தபசில் சொத்திற்கு விரோதமாக ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் எவ்வித ஆக்கிரமிப்பும் துலங்காது என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.